செய்தி வெளியீடு 948 26.10.2010.

# நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சினை சுமுகத் தீர்வு காண உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்! போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்ப தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்!

நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்து வருவதைத் தொடர்ந்து, முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (26.10.2010) தலைமைச் செயலகத்தில்,

1) திரு.செ. குப்புசாமி, தலைவர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
2) திரு.மு. சண்முகம், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
3) திரு.வேல்முருகன், எம்.எல்.ஏ., பாட்டாளி தொழிற் சங்கம்
4) திரு.பெருமாள், தலைவர், தலைவர், பாட்டாளி தொழிற் சங்கம்
5) திரு. அன்பழகன், ஒப்பந்தத் தொழிற்சங்கப் பொதுச் செயலாளர்
6) திரு.சேகர், ஏ.ஐ.டி.யு.சி. மாவட்டச் செயலாளர்
7) திரு. குப்புசாமி, ஏ.ஐ.டி.யு.சி. தலைவர், ஒப்பந்தத் தொழிற் சங்கம்
8) திரு.வெங்கடேசன், ஏ.ஐ.டி.யு.சி. பொதுச் செயலாளர், ஒப்பந்தத் தொழிற் சங்கம்
9) திரு.சுகுமாறன், சி.ஐ.டி.யு. மாநிலச் செயலாளர்
10) திரு.குப்புசாமி, சி.ஐ.டி.யு. தொழிற் சங்கத் தலைவர்
11) திரு.சக்கரபாணி, சி.ஐ.டி.யு., பொதுச் செயலாளர், ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்

ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் சந்தித்து, தங்களது கோரிக்கைகள் சம்பந்தமாக எடுத்துக்கூறி, அவை குறித்து முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ள நிலையில், அதனை மீண்டும் வலியுறுத்தி, பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண உதவுமாறு கேட்டுக் கொண்டனர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, தொழிலாளர்களுக்குக் கூடுதலாக நாளொன்றுக்கு 40 ரூபாய் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதையும், இது தவிர பின்வரும் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளதையும் அவர்களிடம் சுட்டிக்காட்டினார்கள்.

- சலவைப்படி மாதம் ஒன்றுக்கு 10 ரூபாயிலிருந்து 25 ரூபாய் ஆக உயர்வு.
- 8.33 சதவீதம் போனசுடன், 500 ரூபாய் சிறப்புத் தொகை.
- 300 ரூபாய் மழைக் கோட்டுக்காக சிறப்புப் படி.
- நெய்வேலி வளாகத்திலேயே ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கெனத் தனி தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியம்.
- 31.10.2010–க்குள் உச்சநீதிமன்ற ஆணைக்குட்பட்டு, முதற்கட்டகமாக 4,200 ஒப்பந்தத் தொழிலாளர்களை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக்குதல்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முன்னதாக உயர்த்தி அளிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்றும், 10 ஆண்டுகள் பணி முடித்த ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கப்பட வேண்டும் என்றும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தியதன் அடிப்படையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இது தொடர்பாக மத்திய அரசுடன் கலந்து பேசி, நல்லதொரு தீர்வு காண விரைவாக நடவடிக்கை எடுப்பதாகவும், அதற்கான சூழ்நிலையை உருவாக்கும் விதமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மின்துறை அமைச்சர் ஆர்க்காடு திரு.நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9